பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**08 03 2026** **7 15**

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** பிரதமர் திரு. நரேந்திர மோடி **33** ஆயிரத்து **500** கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு புதுதில்லியில் இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

**2.** நாடு முழுவதும் உள்ள மக்கள் மருந்தக மையங்கள் பெண் தொழில் முனைவோருக்கு பெரிதும் பயனளிப்பதாக உள்ளது என்று மத்திய உரத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் தெரிவித்துள்ளார்.

**3.** ஈரான் மீதான போரில் ஈடுபடாத அண்டை நாடுகள் மீது தாக்குதல் நடத்தப்படாது என்று அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

**4.** கென்யாவில் பெய்த கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக **10** பேர் உயிரிழந்தனர்.

**5.** ஆல் இங்கிலாந்து ஓபன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் லக்ஷ்யா சென் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி 33 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு புதுதில்லியில் இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

இத்திட்டத்தில் 18 ஆயிரத்து 300 கோடி ரூபாய் செலவிலான இரண்டு புதிய மெட்ரோ ரயில் வழித் தடங்கள் அமைக்கும் பணிகளும் அடங்கும்.

மஜ்லிஸ் பூங்கா - மவுஜ்பூர் இடையே 12 புள்ளி 3 கிலோ மீட்டர் நீளத்திற்கு இளஞ்சிவப்பு வழித்தடமும், தீபாளி சவுக் - மஜ்லி பூங்கா இடையே 9 புள்ளி 9 கிலோ மீட்டர் தொலைவுக்கு புதிய வழித்தடம் ஒன்றும் அமைக்கப்பட உள்ளது.

இந்த புதிய மெட்ரோ ரயில் பாதைகள் புராரி, ஜெகத்பூர், கஜூரிகாஸ், பஜன்புரா, யமுனா விஹார், மதுபன் சவுக் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பயனுள்ளதாக அமையும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

மக்கள் மருந்தக மையங்கள் மூலம் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும் என்று சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற மக்கள் மருந்த தினத்தையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், இந்த மருந்தகங்கள் மூலம் உயர் தரத்திலான மருந்துகள் கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மக்கள் மருந்தகங்கள் குறித்து மக்களிடையே கிடைத்து வரும் வரவேற்பை அடுத்து அதன் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

மக்கள் மருந்தக மையங்களில் மருந்துகளை தடையின்றி விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

நாடு முழுவதும் உள்ள மக்கள் மருந்தக மையங்கள் பெண் தொழில் முனைவோருக்கு பெரிதும் பயனளிப்பதாக உள்ளது என்று மத்திய உரத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் தெரிவித்துள்ளார்.

இந்த மருந்தகங்கள் குறைந்த விலையில் மருந்துகள் கிடைப்பதை உறுதி செய்வதுடன், பெண்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கும் உதவிடுவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

குடியரசுத்தலைவர் பதவி என்பது நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தின் மிக உயர்ந்த பதவி என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், நாட்டின் உயர் பதவியில் இருப்பவர்களுக்கு உரிய மரியாதை மற்றும் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டியது மாநில அரசுகளின் கடமை என்றும் தெரிவித்துள்ளார்.

மேற்குவங்க மாநிலத்தில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு பங்கேற்ற நிகழ்ச்சிக்கு போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்யாதது கண்டனத்திற்குரியது என்று திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

குடியரசுத்தலைவரை அவமதிக்கும் வகையில் செயல்பட்ட மேற்குவங்க மாநில அரசின் நடவடிக்கைகள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாதது என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தைப் பதிவிட்டுள்ள அவர், மேற்குவங்க மாநில அரசின் இந்த செயல், ஒட்டுமொத்த பழங்குடியின

சமுதாயத்தையும் அவமதிக்கும் செயல் என்று டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

ஈரான் மீதான போரில் ஈடுபடாத அண்டை நாடுகள் மீது தாக்குதல் நடத்தப்படாது என்று அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்நாட்டு அதிபர் திரு. **Masoud Pezeshkian** வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

தவறான தகவல்களின் அடிப்படையில் அண்டை நாடுகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு அவர் வருத்தம் தெரிவித்துள்ளார்.

இதனிடையே மேற்காசிய நாடுகளில் 8வது நாளாக தொடர்ந்து போர் நடைபெற்று வருகிறது.

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் நாடுகள் வான்வழி தாக்குதலை நடத்தி வருகின்றன.

அமெரிக்கா, இஸ்ரேல் நாடுகள் நடத்திய தாக்குதலில் இதுவரை ஈரானை சேர்ந்த ஆயிரத்து 332 பேர் கொல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டுக்கான ஐ.நா. தூதர் திரு. அமீர் சயீத் இரவானி தெரிவித்துள்ளார்.

ஜோர்டானின் மலைப் பகுதியில் உள்ள அமெரிக்காவின் கண்காணிப்பு சாதனங்களை தாக்கி அழித்துள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் **41** பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதனிடையே மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்டுள்ள போர்ப் பதற்றம் காரணமாக தில்லி மற்றும் மும்பை விமான நிலையங்களில் இருந்து வெளிநாடுகளுக்கு இயக்கப்படும் நூற்றுக்கும் மேற்பட்ட விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

<<<<>>>>

சர்வதேச மகளிர் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

பல்வேறு கொள்கைகள், திட்டங்கள் மூலம் மகளிருக்கு அதிகாரமளித்தல் மற்றும் பாலின சமத்துவத்தை உறுதி செய்யும் வகையில், கடந்த **1977**-ம் ஆண்டு ஐநா சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஆண்டுதோறும் மார்ச் **8**-ம் தேதி இத்தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

அனைத்து மகளிருக்கும் சம உரிமைகள், நீதி, பாலினச் சமத்துவம் கிடைக்கச் செய்வதற்கான ஒருங்கிணைந்த முயற்சியின் வலிமையை எடுத்துரைப்பதே இந்த ஆண்டு மகளிர் தினத்தின் கருப்பொருளாகும்.

இத்தினத்தையொட்டி, நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

புதுதில்லியில் இன்று நடைபெறும் சர்வதேச மகளிர் தின கொண்டாட்டங்களில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி, இணையமைச்சர் திருமதி சாவித்ரி தாக்கூர் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

கடமைப் பாதையில், பெண்கள் தலைமையிலான நடைப்பயணத்திற்கும் மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்தினத்தை முன்னிட்டு, குடியரசுத் தலைவர், குடியரசு துணைத் தலைவர், பிரதமர், முதலமைச்சர் வில்லிட்ட தலைவர்கள் பலர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

கென்யாவில் பெய்த கனமழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக 10 பேர் உயிரிழந்தனர்.

மோசமான வானிலை காரணமாக விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளில் அந்நாட்டு ராணுவம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

நேற்றிரவு பெய்த கனமழை காரணமாக பல்வேறு பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளதாகவும், வாகனங்கள் சேதமடைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யுக்ரைன் மீது ரஷ்யா நடத்திய வான்வழி தாக்குதலில் 10 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

கார்கீவ் நகரில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு மீது ரஷ்யா நடத்திய ஏவுகணைத் தாக்குதலுக்கு யுக்ரைன் அதிபர் திரு. ஜெலன்ஸ்கி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ரஷ்யா நேற்றிரவு 29 ஏவுகணைகள் மற்றும் 480 ட்ரோன்கள் மூலம் கிவ் உள்ளிட்ட நாட்டின் பிற பகுதிகளில் உள்ள எரிசக்தி நிலையங்களைக்

குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாக திரு. ஜெலன்ஸ்கி குறிப்பிட்டுள்ளார்.

பேரிடர் அபாயங்களை குறைக்கும் நோக்கில் பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையின் கீழ் அவசர கால நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்த கருத்தரங்கு புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

இது தொடர்பாக உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பேரிடர் காலங்களில் உயிரிழப்புகள் ஏற்படுவதை தடுக்கும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இதில் விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களின் அவசர கால செயல்பாட்டு மையங்களுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் இதில் விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்தக் கருத்தரங்கு மத்திய உள்துறை அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

ஆல் இங்கிலாந்து ஓபன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் லக்ஷ்யா சென் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

பர்மிங்ஹாமில் நேற்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 21-16, 18-21, 21-15 என்ற செட்கணக்கில் கனடாவின் Victor Lai-யை வென்றார்.

---------

உலகக் கோப்பை ட்வெண்ட்டி-ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் இறுதியாட்டத்தில், இந்தியா - நியூஸிலாந்தை எதிகொள்கிறது.

அகமதாபாதில் நடைபெறும் இப்போட்டி இன்றிரவு 7.00 மன்னிக்குத் தொடங்குகிறது.

இதனையொட்டி, நாட்டின் பல்வேறு நகரங்களில் இருந்து போட்டி நடைபெறும் அகமதாபாத்திற்கு சிறப்பு விமானங்கள் இயக்கப்படும் என்று ஏர்-இந்தியா நிறுவனமும், ஆகாஷ் ஏர் நிறுவனமும் அறிவித்துள்ளன.

----------

ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில், கொச்சியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் சென்னை அணி 1 - 0 என்ற கோல் கணக்கில் கேரளா அணியை வென்றது.

கொல்கத்தாவில் நடைபெற்ற மற்றொரு போட்டியில், பெங்களூரு அணி 2 - 1 என்ற கோல் கணக்கில் மொகமதன் அணியை வென்றது.

இன்று நடைபெறும் போட்டிகளில், மும்பை அணி - தில்லி அணியையும், பஞ்சாப் அணி - ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியையும் எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**